**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 76/2025** |
| Deposition of witness | : | **PW-10** |
| Name | : | **ஈஸ்வரன்** |
| Father Name | : | **ஆறுமுகம்** |
| Age | : | **59** |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.03.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது குன்னத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.07.2025 ஆம் தேதி காலை குன்னத்தூர் காவல் நிலைய குற்ற எண் 266 of 2025 சட்டப்பிரிவுகள் 304(2) BNS கீழான முதல் தகவல் அறிக்கையை தொடர் விசாரணைக்காக தலைமை காவலர் ரவிக்குமார் எனது பார்வைக்கு வைத்தார். நான் மேற்படி வழக்கினை காலை 09.00 மணி அளவில் எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, சுமார் காலை 10.00 மணியளவில் சம்பவ இடம் சென்று 1 முதல் 4 வரையிலான பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. சம்பவ இடத்தை சாட்சிகள் ராஜேந்திரன் மற்றும் குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்கிறேன் **(மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அன்றைய தினமே முதல் நிலை காவலர் சந்தோஷ் என்பவரது உதவியுடன் சம்பவ இடத்திற்கு அருகாமையில் சுமார்

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.03.03 17:52:34 +0530

48 அடி தொலைவில் இருந்த சுப்பிரமணி என்பவரது வீட்டின் கேமரா, சுமார் 200 மீட்டர் தள்ளி உள்ள ஏர் இந்தியா டெக்ஸ்டைல்ஸ் கேமரா, இரண்டு கிலோமீட்டர் தொலைவில் குன்னத்தூர் நால்ரோட்டில் உள்ள போலீஸ் கண்காணிப்பு கேமராக்கள், மூன்று கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள அரோமா அய்யங்கார் பேக்கரி கேமரா ஆகியவற்றை பார்வையிட்டு, மேற்படி சந்தோஷின் உதவியுடன் பென் டிரைவில் பதிவிறக்கம் செய்து என்னிடம் கொடுத்தார்.

3. மேற்படி கேமரா பதிவுகளை பார்த்தபோது கருப்பு வெள்ளை நிறம் கொண்ட யமஹா ஆர்15 வாகனத்தில் இருவர் வருவதும், அதில் வாகனத்தை ஓட்டி வந்தவர் கருப்பு நிற முழுக்கை சட்டை அணிந்து, ஒல்லியான உடல்வாகு உடன், முகத்தில் மாஸ்க் போட்டு இருந்தார். வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்த நபர் கருப்பு வெள்ளை நிறத்தில் முழுக்கை சட்டை போட்டுக்கொண்டு மாஸ்க் அணிந்திருந்தார், கேமராவில் பார்த்தபோது பருமனாக இருந்தார். அவர்கள் தான் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று தெரிந்து, அவர்களைத் தேடி வந்த நிலையில், கடந்த 11.07.2025 ஆம் தேதி செம்மாண்டம் பாளையம் சோதனை சாவடியில் போலீஸ் பார்ட்டியுடன் காலை 08.00 மணி அளவில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த பதிவு எண் இல்லாத கருப்பு வெள்ளை நிற யமஹா ஆர்15 வாகனத்தை நிறுத்த முற்பட்டபோது, அதில் வந்த இருவர் வாகனத்தை திருப்பிக்கொண்டு தப்பிக்க முயன்றார்கள்.

4. அவர்களை பிடித்து விசாரித்த போது, முன்னுக்கு பின் முரணாக தகவல் சொன்னார்கள். பிறகு அவர்களது பெயர் அபிலாஷ் என்கின்ற அப்துல் ரகுமான், இளார் சக்தி என்று தெரிந்து கொண்டேன். அவர்களை

விசாரித்த போது சுண்டக்காம் பாளையம், ஆதியூர் ரோட்டில் கடந்த 08.07.2025 தேதியில் நகை பறிப்பில் ஈடுபட்டதாக ஒப்புக் கொண்டார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் நவீன்குமார் மற்றும் லோகநாதன் ஆகியோர் முன்னிலையில் காலை 08.15 மணியளவில் லேப்டாப்பில், உடன் இருந்த போலீசார் உதவியுடன் பதிவு செய்து அதன் பிரதியில் சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கினேன். மேலும் எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த வாகனம் தான் வெள்ளகோவிலில் 07.07.2025 ஆம் தேதி ஒரு வீட்டின் முன்பிருந்து எடுத்ததாகவும் கூறினார். நான் அப்போதே அந்த வாகனத்தின் சேஸ் நம்பரை கொண்டு, அதன் உரிமையாளரை பதிவுறுக்கள் மூலமாக கண்டுபிடித்து, அவருக்கும் தகவல் கூறினேன்.

5. அன்றைய தினம் காலை 09.30 மணியளவில், மேற்படி சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஆர்15 வாகனம், மேலும் அபிலாஷ் என்கின்ற அப்துல் ரகுமான் அணிந்திருந்த கருப்பு வெள்ளை நிற செப்பல் மற்றும் வடவள்ளி கோனார் பைனான்ஸ் நகை அடகு ரசீதையும் கைப்பற்றினேன். மேற்படி பொருட்களை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கினேன் **(மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் அ.சா.ஆ.13ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

6. மேலும் இளஞ்சிறார் வசமிருந்து வாக்கரோ நிறுவனத்தின் வெள்ளை நிற செப்பலை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அப்துல் ரகுமான் அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் "என்னை அழைத்துச் சென்றால் . . . . கோவை வடவள்ளியில் நகையை அடகு வைத்த கோனார் பைனான்சையும் அடையாளம் காட்டுகிறேன்" என்று கூறியதன் அடிப்படையில், எதிரி அப்துல் ரகுமான் சாட்சி நவீன்குமார் மற்றும்

போலீஸ் பார்ட்டியுடன் போலீஸ் வாகனத்தில் காலை சுமார் 11.15 மணியளவில் கிளம்பி வடவள்ளியில் உள்ள கோனார் பைனான்சுக்கு போலீஸ் வாகனத்தில் மதியம் 12.30 மணிக்கு சென்று அடைந்தோம்.

7. நாங்கள் அங்கு சென்ற போது, கணக்கர் செந்தில்நாதன் அங்கு இருந்தார். நகை அடகு ரசீதை காண்பித்து, அந்த நகை குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட நகை என்று தெரிவித்தபோது செந்தில்நாதன் கடை உரிமையாளர் பாண்டியனுக்கு தகவல் சொன்னார். பின்னிட்டு பாண்டியன் கடைக்கு வந்து, அந்த நகையை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நகையை சாட்சிகள் செந்தில்நாதன் மற்றும் நவீன்குமார் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **(மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

8. பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட பொருளுடன் மாலை சுமார் 04.00 மணியளவில் காவல் நிலையம் வந்து புகார்தாரர் பூங்கொடி கைப்பற்றப்பட்ட நகை தனது நகை என்று அடையாளம் காட்டி உறுதி செய்தார், மேலும் கண்ணுற்ற சாட்சிகள் மூர்த்தி மற்றும் நடராஜ் ஆகியோர் எதிரிகளை உடல்வாகுவை கொண்டு அடையாளம் காண்பித்தார்கள். மேற்படி மூவரும் அந்த வாகனத்தை சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட வாகனம் என்றும் அடையாளம் காண்பித்தார்கள். வாகனத்தின் உரிமையாளர் ரத்தினமூர்த்தி நிலையம் வந்து மேற்படி சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் தனது வாகனம் என்று உறுதி செய்தார்.

9. மேற்படி எதிரி அபிலாசை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இளம்பிள்ளையாளி சக்தி என்பவரை உத்தரவாதப்பிணையில் அவரது தாயார் பொறுப்பில் அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட பொருட்களை

படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன் **(மேற்படி படிவம் 91 - 2 எண்ணிக்கை - அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்கினை தொடர் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் சுசீலா அவர்கள் பார்வைக்கு வைத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டதா என்றால் பூங்கொடி கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்டது. 11.07.2025 ஆம் தேதி எதிரியை கைது செய்து வாகனத்தை கைப்பற்றிய போது வாகனத்தின் பதிவு எண் TN 99 7726 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. எதிரிகளை கைது செய்வதற்கு முன்பாக சுமார் 20 வாகனங்களை தணிக்கை செய்திருப்பேன். அதற்கான பதிவுகளை நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வாகன தணிக்கை செய்த இடத்தில் போலீஸ் கேமரா உள்ளதா என்றால் இல்லை.

2. எதிரியை கைது செய்த இடத்தில் கம்ப்யூட்டர் பிரிண்டர் போன்ற இயந்திரங்கள் உள்ளதா என்றால் லேப்டாப் மட்டும் தான் கையில் வைத்திருந்தோம். ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகள் வந்த வாகனம், அதன் பதிவு எண் போன்ற விபரங்களை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியை கைது செய்து இடத்திலிருந்து சாட்சிகள் நவீன்குமார் மற்றும் லோகநாதன் எப்போது புறப்பட்டார்கள் என்றால் சாட்சி லோகநாதன் சுமார் 10.45 மணியளவில் கிளம்பி இருப்பார், சாட்சி நவீன் குமார் எங்களுடன் கோயம்புத்தூருக்கு வந்தார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் TN 99 7726 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர

வாகனத்தில் தான் சம்பவத்தில் ஈடுபட்டதாக பதிவு எண் குறிப்பிட்டு கூறி உள்ளார்களா என்றால் சரியல்ல.

3. சாட்சிகள் பூங்கொடி, மூர்த்தி மற்றும் நடராஜ் அவர்களது விசாரணை வாக்குமூலத்தில் எதிரி பயன்படுத்திய வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், அந்த பதிவு எண்ணை நான் கேட்கவில்லை என்றாலும் சரிதான், அந்த வாகனத்தில் பதிவு எண் இல்லை. சாட்சிகள் பூங்கொடி, மூர்த்தி மற்றும் நடராஜ் எதிரிகளின் வயதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் பூங்கொடி, மூர்த்தி மற்றும் நடராஜ் விசாரணை வாக்குமூலத்தில் எதிரிகள் அணிந்திருந்த மாஸ்க் நிறத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் பூங்கொடி, மூர்த்தி மற்றும் நடராஜ் அவர்களது வாக்குமூலத்தில் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாளம் காட்ட இயலும் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, சொல்லி உள்ளார்கள்.

4. சாட்சி பூங்கொடி தனது விசாரணை வாக்குமூலத்தில் களவு போனதாக சொல்லப்படும் நகை எப்போது, எங்கே வாங்கப்பட்டது, அதன் வடிவம், எத்தனை ஆண்டுகளாக அந்த நகை அவரது உபயோகத்தில் இருந்து வந்தது போன்ற விபரங்களை சொல்லவில்லை என்றாலும், அதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை என்றாலும் சரிதான். சாட்சி பூங்கொடி எனது விசாரணையின் போது எதிரி வெள்ளை பூ டிசைன் போட்ட சட்டை அணிந்திருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் கருப்பு வெள்ளை முழுக்கை சட்டை என்று சொல்லியுள்ளார்.

5. சாட்சி பூங்கொடி அவரது மறு விசாரணை வாக்குமூலத்தில் தான் சம்பவ இடத்தை தான் அடையாளம் காட்டியதாக சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. பூங்கொடியின் மகன், அக்கா, உறவினர் கவின்குமார்

ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. சாட்சிகள் மூர்த்தி, நடராஜன் மற்றும் சுப்பிரமணியை நான் சம்பவ இடத்தில் வைத்து அன்றைய தினமே காலை 10.00-11.00 மணியளவில் விசாரணை செய்தேன். சம்பவ இடத்திலிருந்து புகார்தாரரின் வீடு எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் தெரியவில்லை. சம்பவ இடத்தின் அருகே இருக்கும் வனிதா, சுப்புராவ், சுந்தர், வெங்கடாசலபதி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை.

6. நான் புகார்தாரரை மொத்தம் இருமுறை விசாரித்தேன், ஒருமுறை சம்பவ இடத்தில் வைத்தும், மறுமுறை காவல் நிலையத்தில் வைத்தும் மறு வாக்குமூலம் பெற்றேன். போலீசார் சம்பவ இடத்திற்கு அன்றைய தினம் காலை 09.00 மணிக்கு தான் சென்றார்கள், அதுவரையில் போலீசார் யாரும் செல்லவில்லை. மாதிரி வரைபடத்தில் சாட்சி ராஜேந்திரனின் வீடு உள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புகார்தாரர் சாட்சி ராஜேந்திரன் தனக்கு எப்போதிருந்து பழக்கம் என்று எனது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. சாட்சிகள் மூர்த்தி, ராஜேந்திரன் ஆகியோரின் விசாரணை வாக்குமூலத்தினை நான் லேப்டாப்பில் சம்பவ இடத்தில் வைத்து பதிவு செய்தேன். சாட்சி ரத்தினகுமார் தனது விசாரணை வாக்குமூலத்தில் காவல் நிலையத்திற்கு வெளியே நின்று இருந்த பதிவு எண் இல்லாத ஆர்15 வாகனத்தை பார்த்தேன் என்று சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. ரத்தினகுமார் காவல் நிலையத்திற்கு வந்தபோது எதிரி காவல் நிலையத்தில் இருந்தார். சாட்சி ரத்தினகுமார் புகார் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து 11.07.2025 தேதி வரை வெள்ளகோவில் போலீஸ் உதவியுடன் தனது

வாகனத்தை தேடி வந்ததாக எனது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லி உள்ளாரா என்றால் சொல்லி உள்ளார்.

8. வெள்ளகோவில் காவல் நிலையத்தில் இரத்தினகுமார் கொடுத்த புகாரையோ, அதன் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையையோ பெற்று நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். சாட்சி செந்தில்நாதன் தான் எத்தனை ஆண்டுகளாக வடவள்ளி கோனார் பைனான்ஸில் பணியாற்றினார் என்று எனது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி பைனான்ஸ் உரிமையாளர் பாண்டியனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி கோனார் பைனான்சுக்கு அரசு உரிமம் உள்ளதா என்று நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். செந்தில்நாதன் எனது விசாரணை வாக்குமூலத்தில் என்ன காரணம் கூறி எதிரி நகையை அடகு வைத்தார் என்று சொல்லி உள்ளாரா என்றால் இல்லை.

9. சாட்சி செந்தில்நாதன் எதிரி அடகு வைத்த நகையின் மாடல் பற்றி விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றாலும், நான் கைப்பற்றிய ரசீதிலும் நகையின் மாடல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி பைனான்ஸ் ரசீதில் நகையின் தூய்மை தன்மை பற்றியும், சேதாரம் இருந்ததா என்பதை பற்றியும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். செந்தில்நாதனின் விசாரணை வாக்குமூலத்தில் எதிரி நகையை ரூபாய் 75 ஆயிரத்திற்கு தான் அடகு வைத்தார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் எங்கு வைத்து எழுதப்பட்டது என்று விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. புகார்தாரர் விசாரணை வாக்குமூலத்தில்

இந்த வழக்கின் அனைத்து சாட்சிகளும் தான் வசிக்கும் அதே பகுதியில் தான் உள்ளார்கள் என்பதை கூறியுள்ளாரா என்றால் இல்லை.

10. சாட்சி லோகநாதன் எனது விசாரணை வாக்குமூலத்தில் பதிவு எண் இல்லாத ஆர்15 வாகனத்தில் வந்த நபர்களை தான் போலீசார் கைது செய்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். சாட்சிகள் அனைவரும் ஒரே பகுதியில் வசிப்பதாக குறிப்பிட்டு, அவர்களது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி லோகநாதன் எனது விசாரணை வாக்குமூலத்தில் மற்றொரு சாட்சி நவீன்குமார் தனது நண்பர் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி லோகநாதன்-ஐ செம்மாண்டம்பாளையம் சோதனை சாவடியில் வைத்து எதிரியை பிடித்த அன்று மட்டும்தான் விசாரித்தேன். கைப்பற்றுதல் மகஜரில் 9வது காலத்தில் எதிரிகளின் கையொப்பம் பெற வேண்டும் என்றால் அவ்வாறு இல்லை.

11. கைப்பற்றப்பட்ட பொருட்கள் அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் கைப்பற்றுதல் மகஜரை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தார்களா என்றால் சரிதான். கோனார் பைனான்சின் லெட்ஜர் நோட்புக் என்னால் கைப்பற்றப் படவில்லை என்றால் சரிதான். புகார்தாரரின் வீடு எங்கு உள்ளது என்று நான் வரைபடத்தில் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் வரைபடத்தில் அருகே டீக்கடை இருப்பதாக காட்டவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் காவல் நிலையத்தில் வைத்து ஒரு வைக்கோல்புல் டிசைன் செயினை அடையாளம் காட்டினார், அந்த செயினில் கொக்கி சற்று வளைந்து இருந்தது. அவ்வாறு எத்தனை மணிக்கு அடையாளம் காட்டினார் என்றால் சுமார் மாலை 06.00 மணிக்கு மேல் அடையாளம்

காட்டினார். நான் வழக்கை எனது விசாரணைக்கு எடுத்தபோது காவல் நிலையத்தில், புகார்தாரர் இருந்தாரா என்றால் இருந்தார்.

12. எதிரியின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் TN 99 7626 என்று பதிவு எண் கொண்ட யமஹா ஆர்15 வாகனம் பற்றி கூறும் நிலையில், மேற்படி பதிவு எண் கொண்ட வாகனம் யாருடைய வாகனம் என்று நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் மேற்படி பதிவு எண் தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. நான் சாட்சி ரத்தினகுமாரை எங்கே வைத்து விசாரித்தேன் என்றால் வாகனத்தை கைப்பற்றிய அன்றைய தினம் மாலை சுமார் 04.00 - 04.30 மணியளவில் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன். சாட்சிகள் நடராஜன் மற்றும் மூர்த்தி இருவரும் அந்த வழியில் நடந்து வந்தார்கள் என்று காட்ட வீடியோ ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். சாட்சிகள் ராஜேந்திரன் மற்றும் குணசேகரன் இருவரும் பார்வை மகஜரை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தார்களா என்றால் ஆமாம்.

13. நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளைப் பிடித்து எந்த ஒரு பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், நான் சொல்வது போல் நகை எதுவும் பறி போகவில்லை என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.